# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 09 | கிறிஸ்தவம் – I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. இறைவன் அழகிய உலகைப் படைத்து ஒப்படைத்தது.
    1. மனிதனிடம் 2. தூதனிடம்
    3. இயேசுவிடம் 4. சாத்தானிடம்

02. பேழையை செய்யுமாறு இறைவன் கட்டளை இட்டது.
    1. மோசேயிடம் 2.நோவாவிடம்
    3. தாவீதிடம் 4. பவுலிடம்

03. ஒரு கிறிஸ்தவ படை வீரனிடம் இருக்க வேண்டிய முக்கிய பண்பு.
    1. வீரம் 2. நம்பிக்கை
    3. ஜெபம் 4. விட்டுக்கொடுப்பு

04. போர் நிகழும்போது எமது உடலைச் சரியாக வைத்துக் கொள்வதற்குப் ...............பயன்படுத்தப்படுகிறது.
    1. மார்புகவசம் 2.இடைக்கச்சை
    3. கேடயம் 4. மிதியடி

05. யூதரல்லாத இனத்தவரிடம் நற்செய்தியைக் கொண்டு செல்வதற்காகக் கடவுளின் அழைப்பைப் பெற்றவர்.
    1. யூதாஸ் 2. அந்திரேயா
    3. பவுல் 4. ஸ்தேவான்

06. இயேசுவின் சிலுவை மரணத்தினால் எமக்கு கிடைத்த வரப்பிரசாதம்.
    1. இறையரசிற்குள் செல்ல கூடிய தகுதி
    2.அனைவரும் இயேசுவின் சீடராக மாறலாம்.
    3.மீட்பை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்
    4. இறை பிள்ளை என்னும் தகுதியும் பாவமன்னிப்பும்

07. உம் காலடிக்கு உம் வாக்கே விளக்கு. என் பாதைக்கு..................................... அதுவே.
    1. நம்பிக்கையும் 2.ஒளியும்
    3. செம்மையும் 4. தீபமும்

08. அரசஅலுவலகரின் மகன் நோய்வாய்ப் பட்டிருந்த இடம்.
    1. கானா ஊர் 2.எருசலேம்
    3. கப்பர் நகூம் 4. எகிப்து


kalvi.lk

09. இயேசுவின் போதனையை மூன்று நாட்களாக கேட்ட மக்களின் உடல் தேவைகளை அறிந்த இயேசு காட்டிய மாறுத்தரம் அல்லாதது.
1. கவலை அடைந்தார்.
2. உடல் தேவைகளை அறிந்துகொண்டார்.
3. வேறு இடத்துக்கு அழைத்து சென்றார்.
4. கருணையுடன் பிரச்சினைகளில் இடைப்பட்டார்.

10. கானாவூர் திருமண நிகழ்வைக் குறிப்பிடும் நற்செய்தி நூல்,
1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

11) உமது ஆட்சி வருக. என்பதில் உணர்த்தப்படும் விடயம்.
1. இறைவனுடைய அரசு விரைவாக வரவேண்டும்.
2. இறைவனின் ஆட்சிவந்துவிட்டது.
3. இறைவனின் ஆட்சி எமது வாழ்வில் அனுபவிக்கப்படவேண்டும்.
4. இறைவனின் ஆட்சி அனைவருக்கும் உரியது.

12. இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்த விண்ணப்பமானது,
1. தன்னலமற்றதாகக் காணப்படுகின்றது 2. தற்பெருமை அற்றதாகக் காணப்படுகிறது
3. பொதுநலமுடையதாகக் காணப்படுகிறது 4. மேற்கூறிய மூன்றும் சரி

13) அனுதினம் கிறிஸ்தவ வாழ்வில் இறைவனுடன் தொடர்பு கொள்வதற்கான சிறந்த ஊடகமாகக் கருதப்படுவது.
1. ஆலயம் 2. விண்ணப்பம் 3. விசுவாசம் 4. தொலைபேசி

14) "அரசே என் தலைவரே" என அழைத்தது.
1. சவுல் 2. பேதுரு 3.பவுல் 4. தாவீது

15) திருவிவிலியத்தில் முதல் ஐந்து நூல்களும் அழைக்கப்பட்டவிதம்,
1. நற்செய்தி நூல் 2. வரலாற்று நூல்கள்
3.குறிப்பேடுகள் 4. பஞ்சாகமங்கள்

16) கிறிஸ்தவ சபையை இல்லாதொழிக்க மிகவும் கடுமையான அர்ப்பணிப்போடு செயற்பட்டவர்
1.சவுல் 2.யோவான் 3.பேதுரு 4.யூதாஸ்

17) யூதத் தலைமைச் சங்கத்திற்கு முன்னால் ஸ்தேவானுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியபோது அவரது முகம் எவ்வாறிருக்க கண்டனர்.
1. பிரகாசமாக தோன்றியது 2. முகத்தோற்றம் மாறுபட்டதை கண்டார்கள்
3. வானதூதரின் முகம் போல இருக்கக் கண்டார்கள் 4. இருளடைந்ததைக் கண்டார்கள்

18) மது அருந்தும் ஒருவரின் சுபாவமாகக் கருதப்படாதது,
1. பணத்தை வீண் விரயம் செய்வார் 2. நோய்களுக்கு ஆளாக்கப்படுவார்
3. குடும்பத்தினரால் மதிக்கப்படுவார் 4. அவமதிப்புக்கு உட்படுவார்

19) சமூகத்தில் வாழுகிற எம்மிடம் இறைவன் எதிர்பார்க்கும் விடயமாக அமைவது.
1. அனைவருடனும் ஒன்றுபட்டு வாழும் வாழ்வு.
2. உயர் அதிகாரிக்கு கீழ்ப்படிதல்.
3.இறைவார்த்தைக்கு ஏற்ப வாழுதலும் சுகவாழ்வுடன் வாழுதலும்.
4. அனைத்து சமய விழாக்களிலும் கலந்துகொள்ளல்.

20. இஸ்ரேல் மக்களின் முதல் அரசனாக திருப்பொழிவு செய்யப்பட்டவர்
1. தாவீது 2. ஆபிரகாம் 3. மோசே 4. சவுல்

(20 × 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

➢ **முதலாம் வினா உட்பட எனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:**

01. 1. நோவாவிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டு தருக.
2. தாவீது சவுலை கொல்லாததற்கு காரணம் என்ன?
3. தாவீதிடம் வெளிப்பட்ட நற்பண்புகள் இரண்டு தருக
4. இயேசு தனது வாழ்வில் விண்ணப்பம் செய்த சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
5. கிறிஸ்தவர்களாகிய எமது போர் ஆயுதங்கள் இரண்டு தருக.
6. “என்னைப் பின்பற்றவிரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” இப்பகுதியில் வெளிப்படுகிற முக்கியமான செயல்கள் இரண்டு தருக.
7. கடவுள் எமது வாழ்வைப் பாதுகாக்கும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
8. எமது வாழ்வின் ஊடாக இறை சாயலை பிறரும் அனுபவிக்க வேண்டுமானால் எமது வாழ்வின் நடத்தையில் காணப்படவேண்டிய பண்புகள் இரண்டு தருக.
9. ஊனியல்பின் செயல்கள் இரண்டு தருக.
10. ஸ்தேவானிடம் காணப்பட்ட விசேட பண்புகள் இரண்டு தருக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

02. (அ) இறைவன் மனிதனுக்கு தம்மை வெளிப்படுத்தும் பிரதான வழி எது?
(ஆ) இறைவார்த்தையின் மூலம் எமக்கு கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.
(இ) பிறரது வாழ்வை கட்டியெழுப்புவதற்கும். பிறரோடு ஒன்றினைந்து வாழ்வதற்கும் எம்மால் செயற்பட கூடிய சந்தர்ப்பங்கள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

03. (அ) அன்றாட வாழக்கையில் நாம் முகம் கொடுக்கும் துன்பங்கள் இரண்டு தருக.
(ஆ) படைவீரரிடம் இருக்க வேண்டிய மன்றாட்டு பற்றி எபிரேயருக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள் மூன்று தருக?
(இ) இன்று சமுதாயத்தில் தீயசக்திகள் பலவடிவங்களில் எம்மிடம் வருகின்றன. அவ்வாறான சந்தர்ப் பங்கள் 5 தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

04. (அ) திருத்தூதர்களால் ஆற்றப்பட்ட முதல் நிகழ்வுயாது?
(ஆ) திருத்தூதர்களால் ஆற்றப்பட்ட பணிகள் 3 தருக.
(இ) இன்றைய திருச்சபையானது எதிர் நோக்கும் சவால்கள் மூன்றைக் குறிப்பிட்டு அச்சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய வழிகளைக் குறிப்பிடுக.

05. (அ) திருத்தொண்டர்களின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?
(ஆ) திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டதன் காரணம் யாது?
(இ) இன்றைய திருச்சபையானது சமூகத்திற்கு ஆற்றும் பணிகள் 5 ஐக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

06. (அ) கிறிஸ்த்துவுக்குள் புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான பண்புகள் 2 தருக.
(ஆ) நல்ல இறை தொடர்பிற்காக நாம் நடைமுறைப்படுத்த வேண்டிய பண்புகள் 3 தருக.
(இ) கிறிஸ்துவைச் சந்தித்தபின் தன் வாழ்வில் புதிய மாற்றத்தை ஏற்படுத்திய ஒருவரைப் பற்றி புதிய ஏற்பாட்டிலிருந்து தெரிவு செய்து விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457